# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமான வற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கின்றான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகின்றான்."

தெளிவு - 04 | 2003 மார்கழி - 2004 மாசி | இதழ் 01


# இனத்துவேசம் மறைய மதத்துவேச தூண்டலா?

**ஆசிய கண்டத்தில் ஆன்மீக சிறப்பை போற்றும் வழிபாடுகளா லும், திருத்தலங்களாலும், சர்வமத ஒன்றிப்பாலும் தடம்பதித்த இலங்கைத் திருநாட்டில், கடந்த காலங்களில் இனக்குரோதத்தால் பெரும் அழிவுகளை சந்தித்தது, அக்காலத்தில் அனைத்து மதத்தவர்களும் ஒன்றிணைந்து சமாதானத்திற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தி வந்தன.**

**ஆனால், இன்று மதத்துவேசம் அதிகரிக்கின்றது. இதனை தூண்டி அரசியல் இலாபம் தேடும் அவல நிலைக்கு யார் காரணம்?**

எந்த நிகழ்விலும் எல்லா மதத்தினரும் இறைவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர். அந்தளவு மதப்பற்றுக்கொண்ட மக்களிடம் மதத்துவேச உணர்வைத் தூண்டி, மீண்டும் இலங்கை நாட்டில் இரத்த ஆறு ஓட வைக்க எடுக்க முயற்சிகள் மிகவும் கீழ்தரமானது.

தென்னிலங்கையிலும் வேறு பல இடங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவ ஆலயங்கள் குண்டர்களின் தாக்குதலுக்கு உட்பட்டது. இவை தற்செயலாகவோ, தவறுதலாகவோ நடைபெற்றது அல்ல. மாறாக நன்கு திட்டமிட்டு, பலம் வாய்ந்த நிலையில் பகிரங்க மாக செயற்படுத்தப்பட்டது.

இத்தகைய கொடூர நிலைகளை அவதானிக்கின்ற போது, ஆன்மீகம் அழிந்து அராஜரிகம் தலைதூக்கி மக்கள் மனங்களில் மறையாத காயங்களை உண்டு பண்ணுகின்றது.

இச்செயல்களை கண்டும் தக்க நடவடிக்கை எடுக்காது இருக்கும், அரசின் நிலையினால், மக்களின் உள்ளத்தில் எதிர்புணர்வுகளை தூண்டி வன்முறைக்கு இட்டுச்செல்கிறது.

மதம் புனிதமானது அதனை வழிபடுவோர் மாற்று மதத்தினரை மதிக்க வேண்டும். மாறாக புண்படுத்தும் செயல்கள் புரிவோர் தம் மதத்தில் பற்றுக்கொள்ளாதவர் ஆகவே வேற்றுமையில் ஒற்றுமையாக, மனித மாண்பை போற்றி, மனிதம் மலர ஒன்றுபட்டு உழைக்க தெளிவு அழைக்கின்றது.

## மகளிர் தின வழிபாடு

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு 08.03.2004 அன்று மாலை 5.00 மணிக்கு நல்லூர் பரி.யாக்கோபு ஆலயத்தில் நன்றி செலுத்தும் வழிபாடு நடைபெறும்.

இவ்வழிபாட்டை நல்லூர் பரி.யாக்கோபு ஆலய பெண்கள் அமைப்பே ஒழுங்குபடுத்தி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கவலையும் கண்ணீரும்

கிளிநொச்சி பரி.பவுல் ஆலயத்தைச் சேர்ந்த செல்வி. சுயீணாபின்ஸ இரத்திணசிங்கம்இனம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு இறையாறுதல் கிடைக்கவேண்டுகின்றோம்.

இவரது மரணத்தின் மூலம் வெளிப்படும் அநீதியையும், கொடுமையையும் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இனிவரும் காலங்களில் இத்தகைய அநீதிகள் ஏற்படா வண்ணம் சமூகமாக ஒன்றுபட்டு உழைக்க தெளிவு மூலம் அழைப்பு விடுகின்றோம்.

## திருச்சபை தன்னை வெளிப்படுத்த வேண்டுமானால்...

மாறிவருகின்ற இந்த உலகிலே கடவுளின் செயற்பாடு எங்குள்ளது. என்று மனிதன் கேள்வி எழுப்புகின்றான்.

இவ்வாறு மிலாகிய பரி.பவுல் ஆலய பங்குத் தந்தை அருட் பணி மெல்வின் டி.சில்வா அருளுரையாற்றினார்.

உதவித்திருப்பணியாளர்களை திருநிலைப்படுத்தும் வழிபாடு 21-12-2003 அன்று கொழும்பு மறைமாவட்ட பேராலயத்தில் நடைபெற்றது. இதில் அருளுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் யோவான் ஸ்நானகன் இன்று எம்மத்தியில் இருப்பாரானால் அவரால் ஏற்புடைய ஒரு திருச்சபை எதுவாக இன்று அடையாளம் கண்டு கொள்ளப்படும்.

மேலும் யோவான் ஸ்நானகன் ஏழ்மையும்,தாழ்மையும் உள்ளவராக தன்னிடம் இருந்த சுகபோகங்கள் அனைத்தையும் துறந்து, தன்னையே வெறுமையாக்கியது போல, இன்று திருச்சபைகளும் தங்களுடைய தேவையற்ற சுகபோகங்களை துறக்க ஆயத்தமுள்ளதாக இருக்கின்றதா? அவ்வாறு ஏற்படும் போதே திருச்சபை ஜக்கியம் ஏற்படக்கூடியதொன்று.

இதனைத்தான் இயேசுவும் தனது உன்னதக் குருத்துவ செபத்தில் வேண்டினார். எனவே இத்தகைய நிலைக்கு திருச்சபை வர வேண்டுமானால் அதற்கு தன்னைத் தான் தாழ்த்த வேண்டும். அதனை ஆண்டவர் சீடர்களின் பாதங்களை கழுவியதன் ஊடாக வெளிப்படுத்தினார். அத்தோடு பிறருக்கு அதனை செய்யும்படி சிடருக்கு பணித்தார். இதையே திருநிலைப்படுத்தப்பட்ட நீங்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும்.

ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு, மோசே முதலியவர்களின் வாழ்வை பார்க்ககும்போது அவர்கள் தலைவர்களாக வருவதற்கு முன்பு மேய்ப்பர்களாக அனேக இன்னல்களை அனுபவித்தனர்.

குறிப்பாக யோசேப்பின் அனுபவத்தை நாம் எப்போதும், எமது அனுபவமாக ஆக்கிக்கொள்ள

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆத்மாவில் இருந்தே நம்பிக்கை பிறக்கவேண்டும்

யாழ்.குருமுதல்வர்

அஞ்சிவாழும் சமூகத்தினராகிய எங்களுக்கு, அஞ்சாதிருங்கள் நான் உங்களுக்கு ஓர் நற்செய்தியை அறிவிக்கின்றேன். என்று தேவதூதன் வழங்கிய செய்தியானது ஆறுதல் தருவதாக காணப்படுகின்றது.

இவ்வாறு யாழ்.குருமுதல்வர் அருட்பணி எஸ்.பி.நேசக்கமார் அடிகளார் கொழும்பில் உரையாற்றினார்.

வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்மஸ் மகிழ் கீத ஆராதனை முதன் முறையாக கொழும்பு மறைமாவட்ட பேரால யத்தில் அருட்பணி இயேசுதேவன் அடிகளாரின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்றது.

இதில் கொழும்பு சால பரிசுத்த வான்கள் ஆலயம், கிறிஸ்து நாதர் ஆலயம், காலமுகத்திடல் ஆகிய இடங்களில் இருந்து மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அருளுரையாற்றிய யாழ்.குருமுதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் திருமறையில் கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சி நான்கு, முக்கிய மக்களுக்கு அச்சத்தை கொடுத்தது மரியாள் - யோசேப்பு - ஏரோது - மேய்ப்பர்கள் ஆவர்.

இதில் மரியாள் சமூக அவமானங்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்று பயந்து போய் இருந்தாள். யோசேப்பு தனக்கு நியமிக்கப்பட்ட மனைவி, தவறு இழைத்துவிட்டாள் என்றபடியால்

(2 ஆம் பக்கம் பாாக்க)

## பிறமதங்களை கொச்சைப்படுத்தாதீர்

அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

தற்காலத்தில் இறை வார்த்தையை உணர்ந்து கொள்வதற்கு விடை தேடி அலைய வேண்டிய தேவையில்லை. இறைவார்த்தைகள் அன்று நேரடியாக பேசப்பட்டது. இன்று எங்கோ துன்புறும் தாயின் அவலக்குரல், இறைவார்த்தையாக காதில் ஒலிக்கும் போது அதனை அலச்சியப்படுத்திக் கொண்டு, வழிபாடுகளுக்குள், சடங்குகளுக்குள் மட்டும் இறைவார்த்தைகளை தேட முனைவது அர்த்தமற்ற ஒரு செயலாகும்.

இவ்வாறு 22.01.20004 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் போராசிரியர் சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற 'இனப்பிரச்சனையும், இலங்கைத் திருச்சபையும்' என்ற நூலில் அறிமுகவிழாவில் நூலாசிரியர் அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், ஒவ்வொருவரும் தமது மதங்களை மதிப்பது போல் மற்றவர் மதங்களையும் மதித்தல் வேண்டும். பிறர் மதத்தை கொச்சைப்படுத்துபவன் தன் மதத்தின் ஆழத்தை அறிந்து கொள்ளாதவனே ஆவான் என்றார்.

## புதிய குருமுதல்வர்

கொழும்புபேராயலத்தில் 06-01-2004 ஆம் திகதி அன்று, கொழும்பு குருமுதல்வராக அருட்பணி கிஸாந்தா மெண்டிஸ் அடிகளார், திருநிலைப் படுத்தப்பட்டார்.

இவர் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் பல பகுதிகளிலும் பணியாற்றி இருக்கின்றார். குருமுதல்வராக பணி ஏற்பதற்கு முன்பு, கொள்ளுப்பிட்டி புனித மிகாவேல் ஆலயத்தில் பங்குத் தந்தையாக பணியாற்றினார்.

இவர் பணியாற்றிய ஆலயங்கள் அனைத்தும் உயிர் ஊட்டமாகவும், ஒளியாகத் நிகழ்ந்தார். சபை நிர்வாகத்திலும், பொதுநிலையினரின் பங்களிப்புக்கு ஆன்மீக முக்கியத்துவம் கொடுத்து ஆன்மீக எழுச்சி பெற உதவினார். மாற்று ஆற்றல் உள்ள மக்களில், அதிக அக்கறை கொண்டுடிருப்பதுடன். அவர்கள் மேம்பாட்டிற்கு பணியாற்றுவதில் கரிசணை கொண்டவர் அருட்பணி கிசாந்தா மெண்டிஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதப்பகைமைகளைக் களைய மாணவரே முன்வாரீர்

குருநாகலை ஆயர்

நான் உங்களைக் குறித்த எல்லா ஞாபகங்களுக்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன் எனத் தூய பவுல் மக்களுக்கு அடிக்கடி எடுத்துக்கூறுகின்றார். இதன் ஊடாக ஒவ்வொரு நிகழ்வுகளுக்காகவும், அவர் கடவுளை போற்றுவதாக கூறுகின்றார். அதைப் போல நானும் யாழ். நகரத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு ஞாபகமான நிகழ்வுகளுக்கு, கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன். இது யாழ்.மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு குருநாகலை மறை மாவட்ட ஆயர் அதி.வண.குமார இலங்க சிங்க ஆண்டகை உரையாற்றினார்.

சுண்டுக்குளி மகளீர் கல்லூரி பேச் மண்டபதிறப்பு விழா 14-01-2004 அன்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து மண்டபத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றும் போதே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பணியாளர்களுக்கான பணித்தளங்கள்....


உதவித் திருப்பணியாளர்களை திருநிலைப்படுத்தும் வழிபாடு 21-12-2003 அன்று கொழும்பு மறைமாவட்ட பேராலயத்தில் நடைபெற்றுது.

இவ்வழிபாட்டை தலமைதாங்கி நடாத்திய கொழும்பு மறைமாட்ட ஆயர் அதி.வண. டூலிப் டீ.சிக்கேரா ஆண்டகை உதவித் திருப்பணியாளர்களை திருநிலைப்படுத்தினார்.

புதிய உதவித் திருப்பணியாளர்கள், பணியாற்றும் பணித்தலங்கள் வருமாறு.

அருட்பணி சாம்.பொன் னையா கொழும்பு மறைமாவட்ட பேராலயம், அருட்பணி .பிரதிப் இயேசு அடியான் குருத்தலாவை, அருட் பணி. ஸ்ரீபன் ஜெபச்செல்வன் கொட்டகல்ல, அருட்பணி அன்றூ தேவதாசன் நுவரேலியா,

இவர்கள் பணி சிறக்க தெளிவு வாழ்த்துகின்றது.



சுண்டுக்குளி மகளீர் கல்லூரி பேச் மண்டபத்தினை குருநாகலை ஆயர் திறந்து வைப்பதையும், அருகில் கல்லூரி அதிபர் மற்றும் யாழ்.குருமுதல்வர் ஆகியோர் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONERY CHURCH OF CEYLON

## தெளிவுரை

அறிவியல் கண்டு பிடிப்புக்கள
சந்தேகத்தின் விளைவால்,
கேள்விகள் எழுப்பி,
காரண காரிய
தொடர்பை ஆராய்ந்து,
நிரூபிக்கபட்டவை.
ஆனால்
சமயங்கள் நம்பிக்கையை
அடிப்படையாக
கொண்டவை - இன்று
அந்த நம்பிக்கை
சந்தேகத்திற்கு
உட்டுகின்றது.
ஏனெனில்,
மனித பலவீனத்தை
பயன்படுத்தி சமய
வழிபாட்டுக்கு மக்கள்
எண்ணிக்கை
அதிகரிக்க முயற்சிப்பதும்,
மாற்றுச் சமயத்தினரை
மதிக்கும் மனப்பக்குவம்
அற்றுப்போனதும்
வேதனைக்குரியதே.

கடந்த இரண்டு
தசாப்த கால
யுத்தத்தின் வடுக்கள்
ஆறித் தணிய முன்பு,
மதங்களுக்கிடையே
முரண்பாடுகள்
இன்று அதிகரித்து வருவது
மக்களிடம் பெரும் விசனத்தை
உண்டு பண்ணி இருக்கின்றது.

தென்னிலங்கையிலும்
வேறு பல இடங்களிலும் -
இன்றுவரை
நூற்றுக்கு மேற்பட்ட
கிறிஸ்தவ ஆலயங்கள்
மற்றும் நிறுவனங்கள்
குண்டர்களின் தாக்குதலுக்கு
உட்பட்டது. இச் செயல்
பக்கபலம் வாய்ந்த
சக்திகளினால்
முன்னெடுக்கப்பட்டது
சின்னத்தனச்செயலாகும்.
இது அடிமட்ட மக்களிடம்
பரவாது பாதுகாக்க
வேண்டிய பொறுப்பு,
சமூகநலம் கருதிய
அனைவரிடமும உண்டு.

இந்தியாவின் சில
மாநிலங்கள் மதரீதியான
முரண்பாடுகளினால்
பாதிப்புக்குட்பட்டது.
குஜராத், ஒரிஸா போன்ற
மாநிலங்களில்
அடிக்கடி மதம் சார்ந்த
வன்முறைகள் நடைபெற்றது.
அதனால்
ஏற்பட்ட பாதிப்புக்கள் பல
உயிர்களையும் - பல
உடமைகளையும் பறித்தது.
இவ்அவலம் இங்கும் ஏற்பட
வேண்டுமா?

பல்சமய சூழலில் வாழும் நாம்
பிற சமயங்களிடையே
நல்லிணக்கம்
கொள்ளவேண்டும்.
அவர்களை மதிக்க,
அவர்கள் சமய சுதந்திரத்தை
பேணிப்பாதுகாக்கும் போதே
மத பேதம் கடந்த
மனிதத்தை
மலர வைக்கமுடியும்.

-ஆசிரியர்

ஆக்கங்கள் எழுதுங்கள்
தெளிவு கண்டு பிரசுரிப்போம்.

தெளிவு
யாழ்.குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
ல ரூ.5/=

# நீதியின் விதைப்பு சமாதானத்தின் அறுவடை

அருட்பணி.சா.பி.கிருபானந்தன்.


ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க

தமிழ் மக்களுக்காக துடித்த இதயம் இயங்க மறுத்து 20 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. பயங்கரவாதச் தடைச்சட்டத்தினால் இராணுவ மேலான்மையை சட்டரீதியாக நியாயப்படுத்திய போது பல குரல்கள் மழுங்கடிக்கப்பட்ட வேளையில் ஆயர் லக்ஸ்மனின் குரல் மெல்லியதுதான், ஆனால் இறைவாக்கு தன்மையாயானது. கிட்டத் தட்ட 20 ஆண்டுகளுக்குப் பின் ஆயர் லக்ஸ்மன் விக்கிரமசிங்காவின் சிந்தனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைவர் பிரபாகரனுடன் செய்த போர் நிறுத்த ஒப்பந்தம் யதார்த்தப்படுத்தியது.

இலங்கையில் சுதந்திரம் என்பது உயர் குழாமின் நலனை தக்க வைக்கும் அரசியில் கைமாற்றமே. இதுவே மூன்றாம் உலகின் பெரும்பாலான நாடுகளின் அனுபவம். ஏகாதிபத்திய நலனை தொடரவும் தேசியவாத எழுச்சியை தமது வர்க்க - வர்ண நலனுக்கு பாவிக்கவும் நவகாலணித்துவம் எழுச்சி பெற்றது. தாசி விற்றாச்சி குறிப்பிட்டதுபோல் வெள்ளைக்கார துரைகள் மாறி மண்ணிற சாகிப்புக்கள் உருவாக்கினர். பலர் தேசிய அரசியலில் பாராளுமன்ற மேலாண்மையை தொடர தமது கிறிஸ்தவ மத ஆங்கில நேசிப்புள்ள சிங்கள பண்பாட்டு அடையாளங்களை மறுதலித்து சிங்கள பௌத்த அடையாளங்களை மேன்மைப் படுத்தியதை அவதானிக்கலாம். அதீத சிங்கள பௌத்த தன்மையுடையவர்களாக தங்களை இனங் காட்டினர்.

**அடையாளப்படுத்தல் முரண்கை**

இன்று உலகம் முழுவதும் உள்ள போர்களில் பெரும்பான்மையானவை உள்ளக முரண்கைகளே. முரண்கைகள் பல வைகள் காணப்படினும் பெருபான்மைமையான ஆய்வாளர்கள் ஆயுத முரண்கைகளை தேசங்களுக்கு கிடையிலான முரண்கை, புரட்சி முரண்கை, அடையாளப்படுத்தல் முரண்கையாக பார்ப்பதோடு, மேலும் அடையாளப்படுத்தல் முரண்கையின் வளர்ச்சியை நாலு கட்டமாககப் பிரிப்பர்.

**படிப்படியான அரச பயங்கரவாதம்**

பல்லினபல மத சமூக பண்பாட்டு தளமுள்ள உள்ளக இலங்கையில் பெரும்பான்மை இனத்தின் அடையாளப்படுத்தலின் வரலாற்று மீறல்களை இன முரண்கையாகும். ஆதீத அடையாளப்படுத்தல் போக்கு பாராளுமன்ற பெரும்பான்மையால் சட்டவாக்கப்பட்டதும் தமிழர் பெரும்பான்மையையாக வாழ்ந்த இடங்களில் குடியேற்றம் முடுக்கி விடப்பட்டதும் இலங்கை வரலாற்றில் இனவாதத்தின் ஆரம்பமாகும். தமிழ் மக்களின் நியாயமான வன்முறையற்ற எதிர்ப்பு காடைத்தனத்தாலும் கலவரங்களினாலும் சந்திப் பட்டது. இலங்கை இராணுவம் இனவாத இராணுவமாக வளர்த் தெடுக்கப்பட்டது. இராணுவத்தின் மேலான்மை பயங்கரவாத சட்டத்தினால் நியாயப்படுத்தப்பட்டது.

**அரசபயங்கரவாதம்**

1 ஆவது கட்டம் - அதைியான ஸ்திர நிலை. 2 ஆவது கட்டம் - அரசியலில் முறுகுநிலை. 3 ஆவது கட்டம் - அவரசமிகு அரசியல் முரண்கை. 4 ஆவது கட்டம் - குறைவான இறுக்கத்தன்மையுடைய முரண்கை என வளர்ச்சிப் போக்கை பெரும்பான்மையான ஆய்வாளர்கள் 4 வரலாற்றுக் கட்டங்களாக பகுப்பர். பயங்கரவாதச் தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு புல் வீரதுங்க யாழ்ப்பாணம் அனுப் பப்பட்டார். பயங்கரவாத தடைச் சட்டம் என்ற இராணுவ அரக்கன் தனது வரலாற்று கோரத்தனத்தை தொடங்கியது மண்டை தீவுச் சந்தியில் இன்பம் செல்வம் படுகொலைகளில் இதனைத் தொடர்ந்து அரச பயங்கரவாதத்தை இராணு மேலான்மையால் தொடர விடுத்த வரலாற்றின் கொடுமையான பக்கங்கள் விரியத்தொடங்கின.

**மனிதப் பொதுமை**

இலங்கையில் இனவாதப் போக்கு ஸ்திரமடைந்த சமூக - அரசியல் தளத்தில் ஆயர் லக்ஸ்மன் பணி முன்னெடுப்பு அவரது இன மதம் என்ற வரையறைகளைக் கடந்த மனிதப் பொதுமையை தேடியது எனலாம். சிங்கள பௌத்த இனவாதம் இறுக்கத்தன்மையான ஜே.ஆர்.அரசியலில் உயர்ச்சிடைந்தபோது இன உறவுகள் உடையத்தொடங்கின. இனவாதமற்ற தளத்தைக் கட்டியெழுப்ப பல பொது வேலைத் திட்டங்களை முன்வைத்தார். இனங்களுக்கிடையிலான சமத்துவம் நீதிகான இயக்கம் முகிழ்ந்தது இக்காலக் கட்டதிலாகும். இலங்கை மனித உரிமைகள் சங்க தலைவராகக் கடமையாற்றினார்.

**கறுப்பு யூலை பெறுக்குமா**

1983 இலங்கையில் நடந்த வரலாற்று சோகத்தின் கறுப்பு யூலை இப்போது இலங்கை வரலாற்றில் ஒரு குறியீட்டுப் பெயர் தான். 20 ஆண்டுகளுக்குப் பின் போர் நிறுத்த சூழலில் 1983 ஆடிக்கலவரத்தின் மீளாய்வு சற்று வித்தியாசமாயும் மன்னிப்பு பற்றி பலத்த குரல்கள் ஊடகங்களில் ஒலித்தன. அன்றை அரசியில் இருந்த ஜே.ஆர். மற்றும் சக பாடிகள், ஊடகத்துறையினர், இன வாதிகள் இன்னும் பல மதத்தலைவர்கள் சிங்கள மக்களின் இயற்கையான எதிர்ப்பு என சாயம் பூசியதும் தமிழுக்கு நல்ல பாடம் கற்பித் தோம் என மகிழந்ததும் பெரும் பான்மையான சிந்தனைப் போக்குத்தான். இந்த ஆதிக்கவாதிகளின் காட்டுச் கூச்சல்கள் மத்தியில் ஆயர் ல்க்ஸ்மனின் குரல் மெல்லியதுதான். 1983 ஆடிக் கலவரத்தின்போது ஆயர் லக்ஸ்மன் விக்கிரம சிங்க லண்டனில் சிகிச்சைக்காகப் போயிருந்த போதும் அவர் இலங்கை திரும்பிவுடன் நடாத்தப்பட்ட மனித அவலங்களுக்கும் சோகங்களுக்கும் மன்னிப்பு கேட்க வலியுறுத் தியதோடு, யாழ்.வந்து பகிரங்கமாக அவர் மன்னிப்பு பற்றிய பேசியது அன்றைய வரலாற்றுக் கட்டங்களில் ஒரு இறைவாக்குரைப்பேயாகும். தனது நண்பர்களையும் பல நிறுவனங்களையும் சந்தித்தார். ஆடிக்கலவரம் உச்சமட்டமாகத் தொடங்கமுன் நடாத்தப்பட்ட இராணுவ வெறியாட்டத்தில் பிரயாணத்தின் போது கொல்லப்பட்ட தனது நண்பன் மனிதன் ஆசிரியர் விமலதாசன், பண்டத்திரிப்பு அவர் இல்லத்தில் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்தார். பல மதங்கள் இலங்கையின் பண்பாட்டுத் தளத்தை செழுமைப் படுத்திய போதும் இக்கலவரம் எப்படி நடந்தது என்பது அவர் விடுத்த கேள்வியாகும்.

ஆரம்பக் கல்வியைக் கொழும்பு றோயல் கல்லூரியில்

கல்லூரி நகர்விளையாட்டுக் குழுவில் கலர்ஸ்

இலங்கை சர்வகலாசாலையில் உயர்படிப்பு, பொருளில் அரசியல் விஞ்ஞானம்

உயர் கல்வி ஒக்ஸ்பட், கோபிக் கல்லூரி அரசியல் மெய்யியல்

அங்கலிக்கன் மதகுருவாக லண்டனில் திருநிலைப்படுத்தப்பட்டார்

அங்கு சேவையற்றியபின் இலங்கை திரும்பி பணியை தொடர்ந்தார் மொனட்டுவா,

பின்னர் மாணவ ஆன்மீகப் பணியாளராக பேராதனை பல்கலைக் கழகத்தில் படிப்பித்தல் பணியை தொடர்ந்தார்.

குருநாகல் மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார்.

அவரது சிந்தனை இனவாத அரசியலில் அர்த்தமற்ற கனவிலி சிந்தயையென புறம் தள்ளப்பட்டது.

## மனிதனை பேசவிடுங்கள்

ஆயுதங்களே.......!
போதும் போதும்
நீங்கள் பேசியது
உங்கள் பேச்சால்
கருவறை சிசுக்கள் கூட
கண்ணீர் வடிக்கின்றன.
உங்கள் பேச்சை
நிறுத்தி விடுங்கள்.
தவறுகளை
மறப்பதுவும் மன்னிப்பதுவும்!
மனித நேயங்கள்
மரணத்தின் முடிவிலும்
மன்னிக்கத் தெரியாத
ஆயுதங்களே....!
மனிதனை பேசவிடுங்கள்
இப்போது
யார் பேசுவது?
மனிதத்தை
மதிக்க தெரிந்தவர்களே
மனிதருடன் மனிதன்
பேசட்டும்
ஆயுதங்களே....!
விலகி நில்லுங்கள்
அரக்கத் தனம் நீங்கி
அன்புவழி பிறக்கட்டும்
ஆயுதங்களே.....!
விலகி நில்லுங்கள்.

P.றொசிற்றா
அருள் ஆலயம்
நெளுக்குளம்.

## ஆத்மாவில் ..........

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுபடியும் எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்று பயந்திருந்தார்.

ஏரோது தனது அதிகாரத்திற்கும், பதவிக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்று பயந்திருந்தான். மேய்ப்பர்கள் சமூகத்தினால் அங்கிகரிக்கப்படாத செல்லாக்காசாகி மீட்பு எப்போது, யாரால் வரும் என்று அச்சத்துடன் வாழ்ந்தனர்.

அத்தகைய மக்களுக்கு ஆண்டவரின் நம்பிக்கையின், விடுதலையின் செய்தி அறிவிக்கப்பட்டதனை நாம் உணருகின்றோம். அதேபோல இன்னும் அநேகர் அச்சங்களினால் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட மக்கள் விடுதலைக்காக ஏங்குகின்றனர்.

குறிப்பாக நாட்டில் அமைதி எப்பொழுது தோன்றும் எனவும், மதக் கலவரங்களால் பாதிக்கப்பட்டருப்பவர்கள் எப்போது அதில் இருந்து விடுதலை கிடைக்கும் எனவும் அஞ சிக்கொண்டிருப்பதை நாம் அவதாகின்னலாம். இப்போறப்பட்ட மக்களுக்கு ஆண்டவர் நம் பிக்கையின் செய்தியைத் தருகின்றார்.

நம்பிக்கை எங்களுக்கு உள்ளிருந்து வருகின்றது. வெளியின் அச்சங்களை முறியடிப்பதற்கு அது உதவுகின்றது. கடவுள் பழைய, புதிய ஏற்பாடுகளிலும், காலத்திறக்கு காலம் பயந்து வாழும் மக்களுக்கு,வழங்கும் நற்செய்தி எப்பொழுதும் நம்பிக்கையின் நற்செய்தியாக காணப்படுகின்றது.

இயேசுவின் பிறப்பின்போது இந்த நற்செய்தி வழங்கப்பட்டது. எனவே அவர் எனறும் இம்மானுவேலாக எம்மோடுகூட இருக்கின்றார் என்பதே பிறப்பின் முக்கிய செய்தியாகும்.

## மதப்பகைமைகளைக்...........

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் கிறிஸ்து மீது நம்பிக்கை வைத்து அவரை அத்திவாரமாக கொண்டு கட்டி எழுப்பப்பட்டுள்ள இந்தக் கட்டடம், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சான்றாக அமைகின்றது.

அதாவது உயிர்த்தெழுந்த கிறிஸ்து மீது நம்பிக்கை கொண்டுள்ள சமூகம் என்றுமே, தனது நம்பிக்கையை இழப்பதில்லை மேலும் கல்லூரி வாழ்விலே கட்டிடங்கள் அதிகரிக்கும் போது, அது கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதோடு, மாணவர்களுக்கு அக்கல்லூரி வழங்குகின்ற சலுகைகளையும்,வசதிகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

இதன் அடிப்படையில் அன்று சிறிதான கடுகு விதை போல 108 வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட இக்கல்லூரி இன்று வளர்ந்து, அநேகமக்களுக்கு பிரயோசனம் உள்ள பாரிய விருட்சமாக இன்று திகழ்கின்றுது.

மத வேறுபாடுகள் இன்றி எல்லா மதங்களுக்கும், சமத்துவத்தை வழங்கி, பிறமதங்களை மதிக்க வேண்டுமென்கின்ற எண்ணக் கருவை மாணவரது இளம் பருவத்தில் வழங்குகின்ற இன் நிகழ்ச்சி, மதங்களுக்கு இடையே போட்டி போட்டுக் கொண்டிருக்கின்ற எமது சமூகத்திற்கு சிறந்த பாடமாக அமைகின்றது.

எனவே இக்கல்லூரி மாணவிகள் மதப்பகைமை கொண்டிருக்கும் இந்த சமூகத்திற்கும், இன ரீதியாக பிளவுபட்டிருக்கும் எமது காரியங்ளை கற்பிக்க அழைக்கப் படுகின்றீர்கள் என்றார்.

### ஒப்புரவு

ஒப்புரவாகுமுன் - மனங்கள்
துப்புரவு செய்யப்பட்டாலே
ஒப்புரவு என்பது
நீண்டு நிலைக்கும்
ஒப்பற்ற உறவாகும் - இது
தனிமனித வாழ்வானாலும் சரி
திருச்சபை வாழ்வானாலும் சரி
அரசியல் வாழ்வானாலும் சரி.
ஜெ.எம்.பி.றொட்றிக்கோ.

## திருச்சபை தன்னை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். யோசேப்பு விரக்தியின மத்தியில் எவ்வளவு பொறுமையோடு இருந்தாரோ அதைப்போல பணியாளராகிய நீங்களும் பொறுமையோடு இருக்க அழைக்கப்படுகின்றீர்கள்.

இன்று திருச்சபை தூய ஆவியானவருக்குள் மறுபடியும் திருமுழுக்கு பெற அழைக்கப்படுகின்றது. அவ்வாறு செய்வதன் ஊடாக மாத்திரமே கிறிஸ்துவை பிறருக்கு காட்ட முடியும் என்றார்.

# இடமாற்றங்கள்

யாழ். குருமுதல்வர் - அருட்பணி எஸ்.பி.நேசக்குமார், பரி. கன்னி மரியாள் ஆலயம், கோப்பாய்.

யாழ். பிரதேசமுதல்வர் - அருட பணி என்.ஜே. ஞானப்பொன்ராஜா, சென்.ஜோன்ஸ் ஆலயம், சுண்டுக் குளி. அருட்பணி தோமஸ் ஜோர்ஜ் பரி. இம்மானுவேல் ஆலயம், உரும்பிராய். பரி.திரித்துவ ஆலயம், கொக்குவில். அருட்பணி அ.ஸ்ரீபன் சென். ஜேம்ஸ் ஆலயம், நல்லூர். அருட்பணி ஏ.எல்.லக்சேந்திரகுமார் செ.யோன்ஸ் ஆலயம், சுண்டுக் குளி. சகோ.கிளே பிரபாகர் பரி அந்திரேயா ஆலயம், பளை. பரி.மகதேலேனா மரியாள் ஆலயம், உடுத் துறை.

வன்னி மிஷன் அருட்பணி சாள்ஸ் டேவிற், அருட்பணி மனுரூபன், சகோதரி கமலேஸ்வரி.

வவுனியா மிஷன் அருட்பணி எஸ்.டி. பி.செல்வன், அருட்பணி குணவதனி புதிதாக வன்னி மிஷனுக்கு பணியாற்ற வருகை தந்திருக்கும் அருட்பணியாளர்களை வரவேற்று மகிழ்கின்றோம்.

அறுவடையோ மிகுதி வேலையாட்களோ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சார நிகழ்வுகள் அர்த்தம் இழப்பதற்காக கடவுளிடம் மன்னிப்பு வேண்டுவோம்

**பொங்கல்விழாவில் செல்வன்**

தைப்பொங்கலை நாம் கொண்டாடும் போது கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றோம். அதாவது கடவுள் இந்த இயற்கையை படைத்து பராமரித்து, ஏற்ற காலத்தில் பூமியின் நற்பலன்களை, நாம் அனுபவிக்கச் செய்கின்ற படியினால் கடவுளுக்கு நன்றி செலுத்த அழைக்கப்படுகின்றோம்.

இவ்வாறு வவுனியா தூய ஆவியானவர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எஸ்.டி.பி. செல்வன் அருளுரையாற்றினார்.

சுண்டுக்குளி சென்.யோன்ஸ் ஆலயத்தில் 15-01-2004 அன்று காலை பங்குத் தந்தை அருட்பணி என்.ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் நடைபெற்ற தைப்பொங்கல் திருநாள், நன்றி செலுத்தும் வழிபாட்டில் அருளுரையாற்றும் போதே அருட்பணி செல்வன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கடவுள் மனிதனுக்கு தந்த பொறுப்பை நாம் ஞாபகப்படுத்திக் கொள்கிள்றோம். அதாவது பூமியை ஆண்டு கொள்ளுங்கள் என்று இறைவன் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும், பொறுப்பையும் நாம் புதிப்பித்துக் கொள்ளுகின்றோம்.

பொங்கலில் நாம் இணைந்து கொள்வதன் மூலம், எமது நாட்டில் தோன்றிய மதங்களின் பண்டிகைகளுக்கு புதிய விளக்கம் அளித்து அவற்றை கொண்டாட வேண்டிய தேவை, அவற்றை புதிப்பிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடும் கொண்டாட்டம் பிற இனத்திடம் இருந்தும், கலாசாரத்தில் இருந்தும் எடுத்தது ஆகும். உதாரணமாக கிறிஸ்து பிறப்பு பண்டிகை ரோமரிடம் இருந்தும், பாஸ்கா பண்டிகை எகிப்தியரிடம் இருந்தும் பெறப்பட்டது. இப்படிப்பட்ட நிலையில், எமது தமிழ்க் கலாசாரத்தில் தோன்றியபண்டிகைகளுக்கு நாம் கிறிஸ்தவ விளக்கங்களை அளித்து அவற்றை கொண்டாட கூடாதா? என்ற வினாவை எழுப்ப வேண்டும்.

இன்று பொங்கலை நாம் கொண்டாடும் போது நாம் கடவுளிடம் பாவ அறிக்கை செய்ய வேண்டும், ஏனெனில் முன்பு பொங்கல் வாழ்த்து மடல்களில் கடவுளின் படங்கள் பதிக்கப்பட்டது. ஆனால் தற்போது அவ்வட்டைகளில் சினிமா நடிகர்களின் படங்கள் பதிக்கப்படுகின்றன. இதற்காக கடவுளிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்.

மேலும் கோலம் கோடும்போது அரிசி மாவினால் கோலம் போட வேண்டும். அப்போது தான் அவற்றை எறும்பு போன்ற சிறு பிராணிகள் உண்ணும். ஆனால் இக்காலங்களில், அச்சிறு பிராணிகளுக்கு உணவு வழங்கப்படுவதை தவிர்த்து செங்கட்டி தூள்களினால் கோலம் போடுகின்றார்கள். இதற்காகவும் பாவ அறிக்கை செய்ய வேண்டும்.

மதஅடிப்படையிலான பொங்கல் விழா வெடிகளை மையப்படுத்தி ஒரு வியாபார மையமாக மாறிவிட்டது. இதனால் பொங்கலின் அடிப்படைக் கருத்துக்கள் எதுவும் வெளிக் கொணரப்படுவது இல்லை.

திருச்சபை தன்னை சமூகத்தில் இருந்து எப்போதும் பிரித்துக் கொண்டே இருக்கின் றது.

எனவே நாம் பொங்கலை கொண்டாடாத பட்சத்தில் உழவர்களிடம் இருந்து எம்மை பிரிக்கின்றோம். இது கடவுளின் ஒரு படைப்பை நிராகரிப்பதற்கு சமமானது ஆகும். இத்தகைய பாவத்திற்காகவும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

பொங்கல் பொங்கப்படும் போது குடும்பமாக மக்கள் ஒன்றிணைந்து பொங்கி வழிகின்ற போது பொங்கலோ பொங்கல் என்று ஆர்ப்பரிப்பார்கள் இதைப் போன்று ,எமது தேசத்திலும், நீதி, அமைதி, ஒப்புரவாதல், சுதந்திரம் முதலியவைகள் பொங்கிவழியவேண்டும். அப்போது தான் அவைகள் அர்த்தமுள்ளதாகும் என்றார்.

## பவளவிழா காணும் மூத்த கலைஞர்



நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்ளை எழுதி நெறியாள்கை செய்து. அதில நடித்தும் தன்னை ஓர் கலைஞராக வெளிப்படுத்திய மூத்த கலைஞர் நவாலியூரான் கலாபூஷணம் நா.செல்லத்துரை ஆசிரியர் இவ்வருடம் தை மாதம் பவளவிழாவினை கொண்டாடினார்.

இவர் ஈழத்தில் தயாரித்த 'காத்திருப்பேன் உனக்காக' என்ற திரைப்படத்திற்கு கதை வசனம், எழுதி, கதாநாயகனின் தந்தைக்கு பாத்திரம் ஏற்று நடித்து பாராட்டு பெற்றவர். இவரது வெளியீடுகளாக 'முகை வெடித்த மொட்டு', நாவல் 'சின்னவனா பெரியவனா' கூத்து, 'உலகம் எங்கள் கையில்' நாடகம் என்பன நூலுருப்பெற்றன.

நவாலியூரானின் உயர் திறமைக்கு, அவருக்கு கிடைத்த கௌரவங்களும், பட்டங்களும், கட்டியம் கூறுகின்றன.

கிறிஸ்தவ வானொலி நாடகங்களையும், மேடை நாடகங்களையும் தயாரித்து நெறியாள்கை செய்த நவாலியூரான் நலலூர் பரி. யாக்கோபு ஆலய வாலிபர்களின் உதவியுடன் வருடம்தோறும் நடைபெறுகின்ற விடுதலையின் ஒலி நிகழ்வுகளில் பல நாடகங்களை மேடையேற்றியமை பாராட்டுக்குரியது.

கலைஞர் நவாலியூரான், பணி மேலும் சிறக்க தெளிவு வாழ்த்துகின்றது.

## மக்கள் மனங்களில் தடம் பதித்த பணியாளன்



அட்பணி கொட்வின் வீரசூரியவின் வாழ்வு ஓர் முன்மாதிரியான வாழ்வு, மேய்ப்புப் பணியாளராக இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் சேவையாற்றி இருக்கும் இவர் தனது நேரத்தின் பெரும் பகுதியை மக்களின் முன்னேற்ற பணிக்காகவே அர்ப்பணித்தார்.

இவ்வாறு முன்னால் காலி குருமுதல்வர் அட்பணி பற்றிக் பெணர்னான்டோ அடிகளார் குறிப்பிட்டார்.

கொழும்பு போராலயத்தில் 21-12-2003 அன்று நடைபெற்ற கொழும்பு குருமுதல்வர் வீரசூரி அடிகளாரின் பிரியாவிடை வைபவத்தின் போதே அவர் மேற் கண்டவாறு தொதிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றுகையில் - நல் ஆலோசகராக பணியாற்றி மக்களின் குறைநிறைகளை கேட்டு, ஆலோசனை வழங்கினார். யாப்பு தயாரிப்பதிலும் தெளிவுமிக்க இவர் கொழும்பு மறைமாவட்டத்தின் யாப்பு மாற்றங்களுக்கு சிறந்த நிர்வாகியாகவும் இருந்து எல்லார் மனங்களிலும் இடம் பிடித்துக்கொண்டவர்.

ஆதரவற்ற மக்களின் குரலாக தொழிற்பட்ட முதல்வர் மக்களின் பிரச்சினைகளை தனது பிரச்சனையாக கருதியே தீர்வுகாண முற்பட்டார்.

கொழும்பு மறைமாவட்டதின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவராகவும் இவர் காணப்படுகின்றார். காரணம் புதிய ஆயரை தெரிவு செய்கின்ற கூட்டத்தில் இவர்இரு முறை தலைமை தாங்கி நடாத்தியிருக்கின்றார். அத்துடன் 20 வருடங்கள் குருமுதல்வராக பணியாற்றி ஓய்வு பெறுவது சிறப்புக்குரிய விடயங்களே என்றார்.

கொழும்பு ஆயர் அதி.வண. டூலிப்.டி.சிக்கேராஆண்டகை, அருட்பணி கொட்லின் வீரசூரிய அடிகளாரை பற்றி உரையாற்றும்போது....

நிர்வாக திறமை மிக்க இவரது உதவியும், ஆலோசகைகளையும்கொழும்பு மறைமாவட்டத்திற்கு தொடர்ந்தும் தேவைப்படுகின்றது என்றார்.

இறுதியாக அருட்பணி கொட்லின் வீரசூரிய அடிகளார் பதிலுரையாற்றும் போது தன்னை தாயின் கருவிலே உருவாகும் முன்பே கடவுள் தெரிந்து கொண்டார்.

தனது இயலாமையின்மத்தியில் கடவுள் இயலக் கூடியவராக மாற்றினார். எல்லாவற்றிக்கும் மேலாக எனது குடும்ப பின்னனியே எனது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியது என்றார்.

இவரது சகோதரன் அருட்பணி கனன் லோயிற் வீரசூரிய அடிகளாரும் கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்றார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காவிய நாயகன்

**தவக்கால ஆற்றுகை**

அருள்திரு. பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகளாரின் எழுத்துரு, நெறியாள்கையில் உருப்பெற்ற 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் காட்சி ஏப்ரல் 01, 02, 03, 04 - 2004 ஆம் திகதிகளில் யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும் என்று திருமறைக் கலாமன்ற ஊடகத்துறை பொறுப்பாளர் திரு.செல்மர் எமில் தெரிவித்தார்.

தவக்கால ஆற்றுகை வருடம் தோறும் திருமறை கலாமன்றத்தினால் மிகவும் சிறப்பாக நடை பெற்று வருவது, யாரும் அறிந்த விடயம். அதேபோல் இவ்வருடமும் காவிய நாயகன் திருப்பாடுகளின் காட்சி சிறப்பாக அமைந்து, கல்வாரி நோக்கிய இறைமகனின் பயணத்தில் ஆன்மீக பற்றுறுதியோடு பார்வையாளர்கள் இணைந்திட வாழ்த்துகின்றோம்.

# பாரம்பரிய கலைவடிவங்களில் ஒன்றான கூத்து கலைவடிவம்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைச் சித்தரிக்கும் வகையில் 'தெய்வம் மண்ணில்' என்னும் சிந்து நடைக்கூத்து, இயேசுவின் பிறப்பு விழாவான நத்தார் பண்டிகையை முன்னிட்டு பல இடங்களில் மேடை ஏற்றப்பட்டது. தரம் - 4 தொடக்கம் தரம் - 9 வரையான மாணவர்கள் பங்குபறறிய தெய்வம் மண்ணில் என்ற சிந்துநடைக்கூத்து கூத்துக் கலைக்குரிய விழுமியங்களை உள்ளடக்கியதாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பாரம்பரிய கலை வடிவங்களில் கூத்துக்கள் முதன்மையானவை. அதிலும் அனைவரையும் ஆடவைக்கும் சிந்து நடைக்கூத்தானது சிறுவர் முதல் பெரியோர்கள் வரை விரும்பி ரசிக்கும் ஒரு நிகழ்வு. பாரம்பரிய கலைவடிவங்கள் அண்மைக்காலங்களில் போட்டி நிகழ்வாகவும், காட்சி நிகழ்வாகவும் இடம் பெற்றுவருகின்றமை கலைகள் மீது எமக்குள்ள பற்றுறுதியைப் பறை சாற்றுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் மரபு வழிக் கதை வடிவங்களாக ஆடப்பட்டு வரும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தின் பாணியில் தெய்வம் மண்ணில் என்ற சிந்துநடைக்கூத்து ஆடப்பட்டமை சிறப்பானது.

தெய்வம் மண்ணில் என்ற கூத்திற்கான கதையை யாழ்.ராதவல்லி எழுதியுள்ளார். இக்கதைக்கு உயிர் வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்தவர் இசைக்கலைஞர் வே.தூயகுமார், இவ் இருவரது முயற்சியின் வெளிப்பாட்டிற்கு சங்கீத ஆசிரியை திருமதி. கேமா தூயகுமார் நிறைவாக பங் களிப்பு வழங்கியுள்ளார் என்பது நாட்டுக் கூத்தைப் பார்த்தவர்க ளுக்குப் புரியும்.

நல்லூர் - சென்.ஜேம்ஸ் ஆலய மண்டபத்தில் முதன்முறையாக இடம்பெற்ற இக்கூத்தானது அரை மணித்தியாலத்தைக் கொண்டது. காப்பு பாடலுடன் ஆரம்பமான இந்தக் கூத்தில் கட்டியக்காரன் வரவில் ஏரோது மன்னனுடைய சிறப்புக்களைக் குறிப்பதான பாடல்கள் இடம்பெறுகின்றன. ஏரோது மன்னன் வரவில் தனது ஆணை, அதிகாரங்களைச் சொல்லும் வகையில் பாடல் அமைகிறது.

இவ்வாறு செல்லும் கதை நகர்வில் மரியாளிற்கும் - தேவதூதனிற்கும் இடையே உரையாடல், (மரியாளிற்கு மங்கள வார்த்தை உரைத்தல்) மரியாளுக்கும் - யோசேப்புக்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. மரியாள் திருமணத்திற்கு முன் கருவுற்ற நிலை கண்டு யோசேப் வேதனையடைதல், தேவதூதன் ஆறுதல் கூறுதல், இவ்வாறு கூத்து தொடர்கிறது.

சிந்து நடைப்பாணியின் தன்மையை மீறாது அதன் தனித்துவங்களிற்கு அமைவாக மிக நேர்த்தியாகப் பார்வையாளர்களை கதையுடன் ஒன்றிக்கும் வகையில் மிகச் சிறப்பாக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. அரங்க அமைப்பு வேடஉடை, ஒப்பனை இவை பாரம்பரிய கூத்துக் கலைவடிவங்களாக இடம்பெறறமை சிறப்பிற்குரியது. சிறுவர்கள் என்ற பக்குவத்தை பொய்ப்பிக்கும் வகையில், கூத்து நெறிமுறைகளிற்கு அமைவாக, தமது முழு உழைப்பையும் வழங்கிய ஒவ்வொரு கலைஞர்களும் பாராட்டிற் குரியவர்கள்.

ஏரோது மன்னாக பாத்திரமேற்ற தரம் - 9 இல் கல்விபயிலும் மாணவி அரசனிற்குரிய கம்பீரமான தோற்றத்தில் தோன்றி, பாத்திரமாகவலம் வந்தமை பாராட்டிற்குரியது. யோசேப்பு, மரியாள், இவர்களது பாத்தி ரமேற்றவர்களும் அவர்களிற் குரியதான எளிமை, அன்பு, கருணை என இவற்றை வெளிப்படுத்தும் வகையில் மிகச் சிறப்பாக பங்களிப்பு வழங்கி யமை பாராட்டிற்குரியது.

> *அங்கிலிக்கன் திருச்சபையின் வரலாற்றுத்திருப்புமுனை யாக முதன்முதலாக பாரம்பாரிய கூத்து கலை வடிவத்தை கிறிஸ்தவபாடு பொருளுக்கேற்ப உட்புகுதிக்கொண்டமை சிறப்பானது. தெய்வம் மண்ணில் என்ற சிந்துநடைக்கூத்தை பரி.யாக்கோபு ஆலய ஓய்வு நாட்பாடசாலைப் பிள்ளைகளினால் நடிக்கப்பட்டது. அக்கூத்தில் விமர்சனத்தினை காவலூர் விஜேந்திரன் 23.01.2004 நமது ஈழநாட்டில் எழுதியிருந்தார். அதனை நன்றியுடன் மீள் பிரசுரம் செய்கின்றோம்.*
>
> **ஆசிரியர்.**





ஏரோது மன்னன் குடிசன மதிப்பை மேற்கொள்வதற்கு யூதோ, கலிலேயா போன்ற இடங்களிலுள்ளவர்களை தமது நாடுகளுக்குச் செல்லுமாறு உத்தரவிடுகின்றான். இதனால், மரியாளும், யோசேப்பு தமது ஊரிற்குச் செல்கின்றார்கள். இவர்கள் பெத்தலேகேம் நகரிற்குச் செல்கை யில் பெத்லேகம் நகரிலுள்ள மாட்டுத் தொழுவத்தில் இயேசு கிறிஸ்து நாதர் பிறக்கிறார். இத னைக் கேள்வியுற்று, வால்வெள்ளி களின் உதவியுடன் அங்கு வந்த ஞானிகள், மீட்பர் பிறந்துள்ளார் என அவரை வணங்கி, வாழ்த்துகிறார்கள். இச்செய்தி ஏரோது மன்னனிற்குத் தெரியவருகிறது.

இவ்வாறு இயேசு கிறிஸ்து பிறந்த நிகழ்வையும் அதற்கு முன் இடம்பெற்ற சம்பங்களையும் இறை வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்திய தெய்வமண்ணில் என்ற சிந்து நடைக்கூத்தானது யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட மண்டபத்திலும், யாழ்.பிரதேச செயலகத்திலும் இடம்பெற்றமை இக்கலை வடிவத்திற்கு கட்டியம் கூறுபவையாக அமைந்தன.

இளம் படைப்பாளிகளின் தெய்வம் மண்ணில் என்ற சிந்துநடைக் கூத்தானது தொலைக்காட்சி மோகமுள்ள இன்றைய காலத்தில் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது. இக்கூத்தானது இன்னும் பல பகுதியிலும் இடம்பெறவுள்ளமை இப் படைப்பிற்கு மேலும் ஓர் நிறைவை வழங்கியுள்ளது. இவ்வாறான படைப்புக்கள் இனிவரும் காலங்களிலும் வித்தியாசமான கோணங்களில் வெளிவரவேண்டும் என்பது பார்வையாளர்களது பேரவா.

**கலைகள் மூலம் இறைபணி ஆற்றுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் நம்மோடு

அதை எப்படி மறக்கிறது
வடிவான குழந்தை, நல்ல வடிவான அம்மா
அண்டைக்கும் இதைப்பற்றித்தான் கதைச்சுக்கொண்டு
இருந்தனாங்க பதிய வந்த சனம் தங்கட
ஊருக்கு திரும்பிப் போகுது
அந்தக் குடும்பமும் வேறு வீட்டீல இருக்குது
எங்களிலிருந்து ஆரும் போய் பால் குடுத்துப்போட்டு வறாது
என்ன வடிவான குழந்தை, நல்ல வடிவான அம்மடா
பார்த்துக்கொண்டே இருக்கலாம்
அதிகமா நான்தான் போறனான்
இண்டைக்கு இன்னும் போகல்ல
நல்ல காலை வேளை ஆடுகளை மேயவிட்டுட்டு இருந்தா
ஒரே ஒப்பாரிச் சத்தம் கேட்குது
அழுகிறது வரவர கூடக் கேட்குது, எல்லாம் வடிவா கேட்குது,
எங்கட ஆள் பறக்கப்பறக்க ஓடி வாறது தெரியுது
ஓம்மோம் ஏரோது வின்ற படைதான
காட்டிக்கொடுக்கறதுக்கு ஏரோதுவுக்கு ஒது பதவி
இதா அந்தக் குழந்தை எண்டு சொல்லிச் சொல்லி குழந்தைகளை
வெட்டித் தள்ளுறாங்க
நான் கேட்டன் அப்ப அந்தக் குழந்தை நானும் பயந்திட்டன்
மெல்லவா அங்க போய் அக்கம் பக்கத்தில விசாரித்து பார்த்தா
இதுக்கு கொஞ்சம் முந்தி குழந்தையை எடுத்துக்கொண்டு
அவரசம் அவசரமாய் அந்தக் குடும்பம் போனது
இஞ்சால இன்னும் வரயில்லை
ஆரும் அந்தக் குழந்தையை கண்டியலோ என்டு
படையினர் விசாரிச்சவ
நானும் வரேக்க என்னை பிடிச்சு விசாரிசவ
எங்களுக்கு தானே முதன் முதலில் வானதூதர் சொன்னது
எங்களுக்கத் தெரியும் தானே மற்றவைக்குத் தெரியாது
நான் மந்தை மேய்க்கிற ஆள் எனக்கு ஒண்டும் தெரியதாது
என்டு சொல்லிப்போட்டு
மெல்லவா கழண்டன்
அப்ப குழந்தை தப்பிற்று எண்டு சொல்லோணும்
கடவுள் நம்மோடு இருக்கிறார் என்டு பெரியவை சொல்லிச்சினம்
வீரம் பேசின கோலியாகத்து மண் கெவ்வ விழல்லையா
எங்களபோல ஆடு மேச்சவர்தானே தாவீது இராசா
வெறும் கவன் கல்லு, எனது கடவுளின் பெயலால்
வருகிறனெண்டு அவர் பயப்படமா போனவர்
அவையள் மாட்டுக் குகையில இருந்த போதிலும் எவ்வளவு
நிறைஞ்ச மனம் இப்படித்தான் அந்த இரவும் நல்ல குளிர்
நெருப்பு கணகண என எரிஞ்சு கொண்டு இருந்தது
வானத்தில ஓரே வெளிச்சம் எங்களுக்கெல்லாம் பயம்,
வானத்தில ஒரு பாடல் கேட்குது
பேயோ, பிசாசோ தெரியாது, எங்கல்ல பெரியவை
சொல்லிச்சினம் பேயா இருக்காது
வானதூதர் போலதான் நினைக்கிறம் எண்டுனு
குழந்தைப் பற்றின அடையாளத்தைச் சொன்னவை
நாங்கள் ஓடிப்போய் பார்த்தா
எங்களுக்கு சொன்ன மாதிரியே இருந்தது
அந்த குழந்தையும் தாயும் என்ன வடிவு
அவ சொன்னவை நசரேத்தில இருந்து வாறம்
தாவீது ராசா குலம் எண்டபடியால பெத்லேகம் வந்தனாங்க
பதிவு எண்டபடியால ஒரே சனம் ஒரு இடமும் கிடைக்கேல்ல
காலம் வந்திற்று எண்டபடியால எங்க போற
குகையால திரும்பி வரேக்க மேல பார்த்த
கிழக்கு வானத்தில ஒரு வித்தியாசமான நட்சேத்திரம்
இது கட்டாயம் ஒரு அடையாளம்தான்
இந்தக் குழந்தை கடவுள் எங்களுக்கு தாற
மெசியாவா இருக்கலாம்
ஜெயருசலேயமில் பிறப்பார் எண்டுதான் எல்லாற்ற நினைப்பும்
அங்கதானே தேவலாயம் இருக்குது
ஆனா எங்கள போல ஏழையா அவரின் பிறப்பு இருக்குது
தாவீது இராசாவும் எங்கள போலதானே, இக்குழந்தையும்
அவற்ற பூர்வீகம் தானே
அந்த பொற்காலம் திரும்பி வரும்.

~ சாமியார்.

# இருளில் உதிக்கும் பேரொளி

காரிருளில் நடந்துவந்த மக்களுக்காய்!
அன்று உதித்தது பாரினில் ஓர் பேரொளி
அதுபோல் இன்றும் உதிர்க்காதோர் அமைதிவழி - என்பதே!
இன்று எம் அனைவரதும் ஆவலாகும்.

உலகின் இருள் நீக்கும் பேரொளியாய்!
இன்று இலங்கையில் உதிர்க்கும் சமாதானத்தில்
விடியாதோ உலகிற்கு அமைதிவழி - என்பதே!
இன்று எம் மனங்களின் வாஞ்சையாகும்.

சாவின் நிழல் சூழந்திருந்த எம் நாட்டினில்!
உதித்துவரும் சமாதானத்தின் பேரொளி
என்றும் நிலைத்திருக்குமோ - என்பதே!
இன்று ஒவ்வொருவரினதும் ஏக்கமாகும்.

உதிக்கவிருக்கும் இன்றைய அமையிலாவது!
மலர்ந்திருக்கும் இப் புதிய ஆண்டாகிலும்
அமைதியின் ஆண்டாக நீதியின் வழியில் விளங்கட்டும்
- என்பதே!
இன்று என்னுடைய ஆவலாகும்.

ஆ.பிரஷாந்த்
தூய ஆவியானவர் ஆலயம்
வவுனியா.

# மோட்ச வாசல் தந்தார்!

அகதியாக
அன்பு இயேசு
அவனியிலே உதித்தார்
வசதியான
வாழ்வினையே
வானமகன் வெறுத்தார்!

வாழ்வளிக்கும்
மீட்பினையே
வளங்க அவரும் வந்தார்
ஏழ்மையிலே
தாழ்மையதை
ஏற்று வாழ்ந்து காட்டினார்

மனிதகுலப்
பாவங்களை
மாற்ற மன்னன் வந்தார்
புனிதமான
புது உலகை
புதுப்பிக்க வழி தந்தார்!

கிறிஸ்மஸ் மூலம்
கிறிஸ்தவர் எமக்கு
மோட்ச வாசல் தந்தார்
கிளர்ந்தெழுந்த
பாவங்களை
கிழித்தெறியச் சொன்னார்!

சூரியநிலா
ஈச்சமோட்டை.

# அன்னை திரேசாவே!!!

அன்னை திரேசாவே
அன்பின் றோசாவே
அன்பிற்கு இலக்கணமே
அன்போடு நினைக்கின்றோம்.

புன்னகை அரசியே
புதுமை நாயகியே
புவியின் தேவதையே
புகழ்கின்றோம்.

கல்கத்தா கதிரவனே
கனிவின் கன்னியே
கருணையின் கருவூலமே
கவி பாடுகின்றோம்.

மண்ணகத்தோடு கண்களின்
கண்ணீர் துடைத்தவனே
விண்ணம் வாழ் தாயே
பண்ணிசைக்கின்றோம்.

தன்னலம் நீக்கியவளே
இன்னல்கள் போக்கியவளே
மின்னும் ஒளியுடையவளே
பொன்னெனப்பேற்றுகின்றோம்.

முதியவரின் ஊன்றுகோலே
கதிகலங்கியோரின் காப்பகமே
விதியை வென்றவளே
துதிக்கின்றோம் தாயே.

சிலுவை ஏந்தியவளே
சிறுவரை தாங்கியவளே
சிறுமைகளை எரித்தவளே
சிரம் தாழ்த்துகின்றோம்.

சுறுசுறுப்பாய் சுழன்றவளே
சுகம் தரும் சொரூபியே
சுந்தரச் செல்வியே
சுகம் கேட்கின்றோம்.

எளிமையின் இருப்பிடமே
ஒளியாய் உதித்தவளே
தளிராய் மலர்ந்தவளே
ஒளியை வணங்குகின்றோம்.

தாயே எம் தாயகமே
சேயர்களின் சகாயமே
மாய உலகின்
மயக்கம் தீருமம்மா

முத்திப் பேறடைந்தவளே
நித்தம் உம் பணிதொடர
சித்தம் கொண்டிட
சகாயமே செய்யுமம்மா.


சகோ.ப.விமல் அமதி.

# சிறுவர் முற்றம்

## சிறுவர் சித்திரம்

சிறுவர்களே உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள

சேவியர் டிசோன்
புனித.பத்திரிசியர் கல்லூரி ஆண்டு - 5






ஜோசப் காருணி
திருக்குடும்ப கன்னியர்மடம
ஆண்டு - 9

போல் ஜீனா கிறிஸ்டினா
திருக்குடும்ப கன்னியர்மடம்
ஆண்டு - 4



சின்னஞ்சிறியோரை என்னிடம் வரவிடுங்கள்

ஆரம்பம்: 23 யூன் 2001, சென்.ஜேம்ஸ் ஆலயம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org